## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவுப்படி தீவிர நடவடிக்கை!

# மதுரை மாநகரில் வெள்ளச் சேதப் பகுதிகளில் அமைச்சர்கள் ஆய்வு!








கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி மதுரை மாநகரில் பெய்த திடீர் பெருமழையால் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்ட மழை வெள்ள பாதிப்பு மீட்பு பணிகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் நேரில் ஆய்வு செய்தனர். உடன் மதுரை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அருண் தம்புராஜ், மாவட்ட ஆட்சியர் சங்கீதா, மாநகராட்சி ஆணையர் தினேஷ் குமார், மாநகராட்சி மேயர் இந்திராணி பொன் வசந்த், மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி, ஆ.வெங்கடேசன், பூமிநாதன் மற்றும் மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### தீபாவளி பண்டிகையை முன்னிட்டு

## திண்டுக்கல் மண்டல போக்குவரத்துக் கழகம் - சிறப்புப் பேருந்துகள் இயக்கம்!

### இணைய சேவை வழியாக முன்பதிவு செய்து பயனடையுமாறு வேண்டுகோள்!

*திண்டுக்கல், அக். 27 -*

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிட், நிர்வாக இயக்குனர், செய்திக் குறிப்பு வருமாறு:-

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிட்., மதுரை மூலமாக 31.10.2024 தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தொடர்ந்து பயணிகளின் அடர்வுக்கு ஏற்ப சென்னை மற்றும் பல்வேறு பகுதிகளுக்கு இப்போக்குவரத்துக் கழகத்தின் மூலம்;

திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டத்திலிருந்து 28.10.2024 தேதி முதல் 04.11.2024 தேதி வரையிலும்; சிறப்புப் பேருந்துகள் இயக்க விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட் டுள்ளன.

சென்னையிலிருந்து சொந்த ஊர்களுக்கு வருவதற்கு தினசரி 75 பேருந்துகளும், விடுமுறை முடிந்து சொந்த ஊரிலிருந்து சென்னைக்குச் செல்ல தினசரி 75 பேருந்துகளும், திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டத்திலிருந்து திருப்பூர், கோவை, திருச்சி, சேலம் போன்ற பிற பகுதிகளுக்கு தினசரி 65 பேருந்துகளும் திண்டுக் கல் மண்டலம் மூலம் இயக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிறப்பியக்கத்தினைக் கண்காணித்திடவும், பொது மக்கள் எவ்வி தச் சிரமமுமின்றி பயணம் செய்வதற்கு ஏதுவாகவும் சென்னை, திண்டுக்கல், பழனி, திருச்சி, திருப்பூர், கோயம்புத்தூர் மற்றும் தேனி ஆகிய பேருந்து நிலையங்களில் பயணிகளுக்கு வழிகாட்டவும் அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் இப்போக்குவரத்துக்கழகம் மூலம் பொதுமக்கள் மற்றும் பயணிகள் சிரமமின்றி பயணம் செய்ய ஏதுவாக அரசு விரைவு போக்குவரத்துக்கழகம் மூலம் (OTRS) WWW.tnstc.in Web site, Mob App மற்றும் இணைய சேவை மையம் வழியாக முன்பதிவு செய்து பயனடையுமாறு திண்டுக் கல் மண்டல நிர்வாக இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## சிவகங்கை தெற்கு ஒன்றியக் கழகச் செயல்வீரர்கள் கூட்டம்!

### எம்.ஜெயராமன் தலைமையில் நடைபெற்றது!

*சிவகங்கை, அக். 27 -*

சிவகங்கை தெற்கு ஒன்றிய கழக செயல்வீரர்கள் கூட்டம் கலைஞர் அறிவாலயத்தில் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் எம். ஜெயராமன் தலைமையில் நடைபெற்றது.

ஒன்றிய துணைச் செயலாளர் பஞ்ச வர்ணம் வரவேற்றுப் பேசினார்.

இந்த கூட்டத்தில் நிர்வாகிகள் முருகன், சு.மனோகரன், பொருளாளர் பாண்டியராஜன், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் மார்கரெட் கமலா, மாவட்ட ஆதிராவிட நலக்குழு அமைப்பாளர் சிங்கமுத்து இளைஞரணி தங்க செல்வம், மாணவரணி ராம்குமார், அழகுசுந்தரம், அங்குசாமி, ஒன்றிய கவுன்சிலர்கள் வேல்முருகன், ரமேஷ், மகளிர் அணி மஞ்சுளா, முருகன் மற்றும் பாகமுகவர்கள் உட்பட ஊராட்சி செயலர்கள், நிர்வாகிகள், கலந்து கொண்டார்கள்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப் பட்டது.

கழக தலைவர் தளபதி முதல்வர் அவர்கள் கடந்த மூன்றரை ஆண்டுகளில் நல்லாட்சி நடத்தி வருகிறார். நல்லாட்சி பணிகள் மக்களிடம் விரைவாக சென்று அடையும் வகையில் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை துணை முதல்வராக நியமித்ததை தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் நன்றியையும் பாராட்டினையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

வருகிற நவம்பர் மாதம் நடைபெற உள்ள வாக்காளர் பட்டியல் திருத்த முகாமில் தெற்கு ஒன்றியத்தில் அனைவரும் தீவிரமாக பணியாற்றுவது என்றும் அதிகளவில். புதிதாக வாக்காளர் சேர்ப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

சிவகங்கை நகர் சிவகங்கை நகரக் கழக செயல் வீரர்கள் கூட்டம் அவைத் தலை வர் ஐ. மதார் தலைமையில் நகர் கழகச் செயலாளர் சி.எம்.துரை. ஆனந்த் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் நகர் கழக நிர்வாகிகள் வீனஸ் ராமநாதன், ஜெயகாந்தன், வீரகாளை, முருகேசன்,ஆறு. சரவணன் அ..ஆயூப்கான், சேகர், சந்திரசேகர், தகவல் தொழில்நுட்ப அணி சதீஷ்,இலக்கிய அணி ராஜபாண்டியன் மற்றும் வட்ட கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், பாகமுகவர்கள் கலந்து கொண்டார்கள்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டது.

கழகத் தலைவர் தளபதி அவர்கள் திராவிட மாடல் அரசின் மக்கள்திட்டப் பணிகள் மக்களிடம் விரைவாக சென்றடையும் வகையில் மாநில கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை துணை முதல்வராக நியமித்ததற்கு நன்றியும் பாராட்டும் தெரிவித்துக் கொள்கிறது.

நவம்பர் மாதம் நடைபெற வாக்காளர் பட்டியல் திருத்த முகாமில் 27 வார்டுகளிலும் பாக முகவர்கள் வார்டு கழக செயலாளர்கள் இணைந்து தீவிரமாக வாக்காளர் பட்டியல் பணிகளை மேற்கொள்வது என்றும், புதிய வாக்காளர்களை சேர்ப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.